# தென்னிலங்கை முஸ்லிம்களின் மதச்சார்பான இலக்கிய முயற்சிகள்- 1960 கள் வரை

Sumaiya, M.S.[1] & Rameez, M.A.M [2]
[1,2]Dept of Languages, Faculty of Arts & Culture, South Eastern University of Sri Lanka.
sumaiyadeen95@gmail.com , rameezmam2009@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் :** பிராந்திய அடிப்படையில் இலக்கியங்களை ஆய்வு செய்வதும் மதிப்பீடு செய்வதும் அண்மைக்கால இலக்கியப் போக்கில் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி கண்டுள்ளது. அந்தவகையில் தென்னிலங்கைப் பிராந்தியமானது தன்னகத்தே தனித்தவமான கலை, கலாசாரப் பாரம்பரியங்களைக் கொண்டு காணப்படுகின்மை குறிப்பிடத்தக்கது. ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கக்கூடிய முஸ்லிம்கள் அரபு வர்த்தகர்களின் சந்ததியினராகவும் தமிழகத்து முஸ்லிம்களின் தொடர்புடையவர்களாகவும் இருந்துள்ளனர். பெரும்பான்மையான சிங்கள மக்களுக்கிடையில் மிகச்சிறுபான்மையாக வாழக்கூடிய தென்னிலங்கை முஸ்லிம்களின் பேச்சு மொழியாகவும் எழுத்து மொழியாகவும் தமிழே காணப்படுகின்றது. இதனால் இவர்களது இலக்கிய முயற்சிகளும் தமிழ் மொழியிலேயே அமையப் பெற்றுள்ளன. இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதி வரை தென்னிலங்கை முஸ்லிம்களின் இலக்கிய முயற்சிகள் சமய உள்ளடக்கங்களை மையப்படுத்தியாகவே அமைந்தன. இவை பெரும்பாலும் ஸுப்ஹு, மஃரிப் தொழுகைகளின் பின்னரும் ஏனைய வைபவங்களிலும் ‘ஹழறா மஜ்லிஸ்’களிலும் இடம்பெற்ற புகழ் மாலைகளாகும். அக்காலப்பகுதியில் இத்தகைய பக்தி நெறி சார்ந்த படைப்புக்களே அச்சமுதாய மக்களிடம் அதிகளவான வரவேற்புப் பெற்றிருந்தன. இவ்வகையில் தென்னிலங்கை முஸ்லிம்களின் மதச்சார்பான இலக்கிய முயற்சிகளை கண்டறிதலை ஆய்வு நோக்கமாகக் கொண்ட இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் விளக்க முறை மற்றும் விபரண ஆய்வு முறையியல் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** இலக்கியம், தென்னிலங்கை, முஸ்லிம்

## ஆய்வு அறிமுகம்

இலக்கியங்கள் அவை சார்ந்த சமூகத்தின் கண்ணாடிகள் என்பதற்கமைய குறித்த பிரதேசங்களிலிருந்து வெளிவரும் இலக்கியங்கள் தமக்கென தனித்துவமான அம்சங்களை தாங்கி வெளிவருகின்றன. பிராந்திய அடிப்படையில் இலக்கியங்களை ஆய்வு செய்வதும் மதிப்பீடு செய்வதும் அண்மைக்கால தமிழிலக்கியப் போக்கில் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சிகண்டு வருகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையிலும் அண்மைக்காலங்களில் இலக்கியங்களை பிராந்திய அடிப்படையில் ஆய்வு செய்கின்ற நடைமுறை வளர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஈழத்துச் சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் முதலிய இலக்கிய வடிவங்களில் பிராந்திய அடிப்படையிலான ஆய்வுகள் வெளிவந்துள்ளன. அந்தவகையில் தென்னிலங்கை பிரதேசமானது தனக்கெனத் தனித்துவமான பண்புகளையும்

பண்பாடுகளையும் கொண்டு காணப்படுகின்றமையால், இப்பிராந்தியத்தில் எழுந்த இலக்கிய முயற்சிகள் குறித்த ஆய்வின் தேவை உணரப்படுவது தவிர்க்க முடியாததொன்றாகும்.

தென்னிலங்கையின் ஆரம்பகட்ட இலக்கிய முயற்சிகளை அறிமுகம் செய்வதாக இவ்வாய்வு அமைகிறது. ஈழத்து இலக்கிய வரலாற்றில் காலத்துக்குக் காலம் தென்னிலங்கையிலிருந்து பல இலக்கியப் படைப்புக்கள் வெளிவந்துள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டுகளளவில் செல்வாக்குப் பெற்றிருந்த சமயக் கருத்துக்களோடு தொடர்புடைய செய்யுள் வடிவங்களை தமது ஆரம்பநிலை படைப்பிலக்கியங்களாகக் கொண்ட தென்னிலங்கையிலிருந்து காத்திரமான ஆக்க இலக்கிய முயற்சிகள் வெளிவந்துள்ளன.

**இலக்கிய மீளாய்வு:**

எம்.எச்.எம்.ஷம்ஸ் (1987) தென்னிலங்கையில் முஸ்லிம் இலக்கிய வளர்ச்சி தென்னிந்தியத் தாக்கதின் விளைவினால் ஏற்பட்ட சமய இலக்கியங்களின் தோற்றம் பற்றியும் அதனைத் தொடர்ந்து தேசிய ரீதியில் ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்கள் என்பன தென்னிலங்கை முஸ்லிம்களின் இலக்கிய வளர்ச்சியில் ஏற்படுத்திய மாற்றங்கள் என்பனவும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன. மரீனா இல்யாஸ் (1998) தென்னிலங்கை முஸ்லிம்களின் தமிழ்ச் சிறுகதைகள் - ஓர் ஆய்வுதென்னிலங்கை முஸ்லிம் சமூகத்தின் வரலாறு, தென்னிலங்கை முஸ்லிம்களின் சிறுகதை இலக்கிய முயற்சியின் ஆரம்பம் மற்றும் அதன் வளர்ச்சி என்பன குறித்து இந்நூலில் நோக்கப்பட்டுள்ளன.

**ஆய்வுப் பிரச்சினை**

தென்னிலங்கை முஸ்லிம்களால் மதச்சார்பான இலக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா எனும் ஆய்வுப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

தென்னிலங்கை முஸ்லிம்களின் மதச்சார்பான இலக்கிய முயற்சிகளை கண்டறிவதையும் தென்னிலங்கையின் இலக்கியச் செழுமையைக் கண்டறிதலையும் நோக்கமாகக் கொண்டதாக இவ்வாய்வு அமையப் பெற்றுள்ளது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வுக்கென முதலாம் நிலைத் தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகளாக தென்னிலங்கை முஸ்லிம்களால் வெளியிடப்பட்ட மதச்சார்பான இலக்கியங்களும் இரண்டாம் நிலைத் தரவுகளாக இவ்வாய்வு நோக்கத்திற்கு பொருத்தமான நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், கட்டுரைகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

**தென்னிலங்கை முஸ்லிம்களின் மதச்சார்பான இலக்கிய முயற்சிகள்**

இலங்கை, ஒன்பது மாகாணங்களையும் அதனுள் 25 நிர்வாக மாவட்டங்களையும் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. இதில் தென்னிலங்கை என்பது பொதுவாக

தென்மாகாணத்தையே குறித்து நிற்கின்றது. நிர்வாக ரீதியாக தென்மாகாணமானது காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. தென்னிலங்கை என்பது நிர்வாக ரீதியாக தென்மாகாணத்தைக் குறித்து நின்றாலும் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் இலக்கிய ரீதியாக தென்னிலங்கையை *பாணந்தறை முதல் திக்குவல்லை வரையான பிரதேசம்* என வரையறை செய்கிறார். இலக்கிய ரீதியான தென்னிலங்கை எனும் வரையறைக்குள் நிர்வாக ரீதியான தென்பகுதியில் உள்ளடங்கப்படும் ஹம்பாந்தோட்டை மாவட்டம் உள்வாங்கப்படுவதில்லை. மாறாக மேல் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களுள் ஒன்றான களுத்துறை மாவட்டம் இலக்கிய ரீதியான தென்னிலங்கை எனும் வரையறைக்குள் உள்வாங்கப்படுகின்றது. இவ்வாய்வானது இலக்கிய ரீதியான தென்னிலங்கையை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது.

களுத்துறை மாவட்டமானது தன்னகத்தே 14 பிரதேச செயலகங்களையும் காலி மாவட்டமானது 19 பிரதேச செயலகங்களையும் மாத்தறை மாவட்டமானது 16 பிரதேச செயலகங்களையும் கொண்டு காணப்படுகின்றன. சனத்தொகை அடிப்படையில் பெரும்பான்மையாக பௌத்தர்களும் சிறுபான்மையாக தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் வாழும் பகுதியாக தென்னிலங்கையை அடையாளப்படுத்தலாம். தென்னிலங்கையின் பல பிரதேசங்களில் தமிழ் பேசும் மக்கள் சிங்களவர்களிடையே பரவலாக வாழ்ந்து வருகின்றனர். பின்வரும் அட்டவணைகள் மத ரீதியாக தென்னிலங்கையின் சனத்தொகை வீதாசாரத்தை மாவட்ட அடிப்படையில் தருகின்றன. இவை 2012 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டவை.

| **மதம்** | **களுத்துறை** | **காலி** | **மாத்தறை** |
|---|---|---|---|
| பௌத்தர்கள் | 83.52% | 93% | 94.0% |
| முஸ்லிம்கள் | 9.40% | 4.7% | 2.35% |
| கிறிஸ்தவர்கள் | 3.79% | 0.9% | 3.23% |
| இந்துக்கள் | 3.27% | 1.5% | 0.36% |
| ஏனையோர் | 0.03% | | 0.01% |

கி.பி.1505 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரின் வருகை நிகழ்ந்த காலப்பிரிவில் இலங்கையின் தென் மற்றும் தென்மேற்குப் பகுதிகளான கொழும்பு, பேருவளை, அளுத்கம, காலி, மாத்தறை மற்றும் வெலிகாமம் பகுதிகளில் முஸ்லிம் குடியேற்றங்கள் காணப்பட்டதாக கலாநிதி டி.பி.அபயசிங்க தனது ''போர்த்துக்கேயர் காலப்பிரிவில் இலங்கை முஸ்லிம்கள்''

எனும் கட்டுரையில் குறிப்பிடுகிறார். தென்னிலங்கையில் பெரும்பான்மை சமூகமாக சிங்களவர்களே வாழ்ந்து வருகின்றனர். இருப்பினும் தென்னிலங்கை வாழ் முஸ்லிம், தமிழ் மக்கள் தமிழையே தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். தென்னிலங்கையின் தமிழ் இலக்கிய முயற்சிகள் எனும் பொழுது அவை பெரும்பாலும் தென்னிலங்கை முஸ்லிம்களால் படைக்கப்பட்டதாகவே இருக்கும். தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட இப்பிரதேச வாழ் முஸ்லிம்கள் ஆரம்பம் முதல் பல்வேறுபட்ட இலக்கியங்களை படைத்தவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வாறு அவர்களால் படைக்கப்பட்ட இலக்கியங்கள் யாவும் பெரும்பாலும் மதச்சார்பானதாகவே இருந்துள்ளன.

தென்னிலங்கை முஸ்லிம்களுக்கும் தென்னிந்திய முஸ்லிம்களுக்கும் இடையே வரலாற்று ரீதியான ஒரு பிணைப்பு இருந்து வந்துள்ளதால், தென்னிலங்கை முஸ்லிம்களின் கலை, கலாசாரப் பாரம்பரியங்களும் தென்னிந்தியாவோடு தொடர்பு பட்டதாகவே காணப்படுகின்றன. (மரீனா இல்யாஸ் 1998:43)

சம்பிரதாயபூர்வமான சமயச் சடங்குகளே சென்ற நூற்றாண்டில் தென்னிலங்கையின் சில பிரதேசங்களில் செல்வாக்குப் பெற்றிருந்தன. இதன் பொருட்டு இயற்றப்பட்ட சமயக் கருத்துக்களோடு தொடர்புடைய செய்யுள் வடிவங்கள் இலக்கியமாகவன்றி, மதக்கிரியைகளுக்கே பயன்பட்டு வந்தன. இவை சமயச் சடங்குகளின் போது ஆத்மிக பலனை எதிபார்த்து உச்சரிக்கப்பட்டன. இலக்கியம் முற்றிலும் மதச்சார்பானதாகக் கருதப்பட்டது. எனவே, நவீன இலக்கியத்துறையில் அவர்கள் அக்கறை காட்டவில்லை. பக்திநெறி சார்ந்த படைப்புகளே அக்காலத்தில் வரவேற்பு பெற்றன. இதனால் மார்க்க அறிஞர்கள் இறையியலோடு சம்பந்தப்பட்ட தமது படைப்புக்களை வெளியிட்டு வந்தனர். இவர்களே இலக்கியவாதிகளாகவும் மதிக்கப்பட்டனர். (மரீனா இல்யாஸ் 1998:44)

இவ்வகையில் நோக்கும் போது தென்னிலங்கையின் ஆரம்பகட்ட மதச்சார்பான இலக்கிய முயற்சிகள் 19ஆம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியில் நூலுருப் பெற்றுள்ளமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் அரையிறுதிப் பகுதியிலேயே, இலங்கை முஸ்லிம்களால் எழுதப்பட்ட நூல்கள் அச்சுருவில் வெளிவரத் தொடங்கின. அவைகளில் இரு பண்புகளைக் காணலாம். முதலாவது, அக்கால வழக்கிலிருந்த அறபுத்தமிழ் மொழியிலேயே ஆரம்பகால நூல்கள் வெளிவந்தன. இரண்டாவதாக ஏறக்குறைய எல்லா நூல்களுமே சமய இலக்கியங்களாயிருந்ததோடு, அநேகமானவை செய்யுள் வடிவில் அமைந்திருந்தன.

இன்று எமக்குக் கிடைப்பவைகளுள் முதன்முதலில் வெளிவந்துள்ள நூல்: பேருவளையைச் சேர்ந்த செய்ஹு முஸ்தபா வலியுல்லாஹ்வின் 'மீஸான் மாலை' எனும் அறபுத்தமிழ் நூலாகும். இது 1868 இல் வெளிவந்தது. (எஸ்.எச்.எம்.ஜமீல் 1994:18) 'மீஸான் மாலை' எனும் நூல், தென்னிலங்கையின் முதல் இலக்கிய நூல் வெளியீடாக அமைவதோடு மட்டுமல்லாமல் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் ஒருவரது, முதலாவது நூல் வெளியீடாகவும் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.


ISBN 978-624-5736-14-0

மேலும் காலி ஷெய்கு தம்பிப் புலவரின் 'காரணமாலை' 1978இல் பதிப்பிக்கப்பட்டது. இது 763 இசைப்பாடல்களால் ஆனது.(எம்.கே.செய்யிது அஹமது 1968:87)

இதனைத் தொடர்ந்து தர்காநகரைச் சேர்ந்த அ.லெ.ஹாமிது அவர்கள் 'இபுலீசு படைப்போர்' எனும் செய்யுள் இலக்கியத்தைப் படைத்தார்கள். இந்நூல் 1883 ஆம் ஆண்டு முஸ்லிம் நேசன் பிரஸ்ஸினால் வெளியிடப்பட்டது. (எஸ்.எச்.எம்.ஜமீல் 1994:19) 1913ஆம் ஆண்டு இவரது 'ஷாதுலீ இரத்தின மாலை' எனும் அரபுத்தமிழ் இலக்கியம் வெளிவந்தது. ஷாதுலிய்யா தரீக்காவின் சிறப்பம்சங்களை உள்ளடக்கியதாக இந்நூல் காணப்படுகின்றது. இதன் தமிழாக்கம் 1982களில் வெளிவந்தது.

இவற்றைத் தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் மேலும் சில சமயசார் இலக்கியங்கள் தென்னிலங்கையில் படைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 1892 ஆம் ஆண்டு வெளிவந்த சேகு அப்துல் காதிர் அவர்களது 'முஹம்மதிய தமிழ்க் கீர்த்தனைகள்' எனும் நூலும், 1896 ஆம் ஆண்டு வெளிவந்த பேருவளையைச் சேர்ந்த செய்ஹு முஹம்மது உபாத்தியார் அவர்களது 'மசாயிகுமாலை' காவியம் எனும் நூலும் குறிப்பிடத்தக்க நூற்தொகுதிகளாகும்.

மேலும் வெலிகாமத்தைச் சேர்ந்த அப்துல் காதிர் ஆலிம் அவர்களது 'ரமழான் மாலை' எனும் அறபுத் தமிழில் அமைந்த செய்யுள் நூலும் தென்னிலங்கையின் முக்கியமானதொரு இலக்கியப் படைப்பாகும். (மரீனா இல்யாஸ் 1998:44) காலியைப் பிறப்பிடமாகக் கொண்ட காதிர் ஸம்ஸுமீன் புலவர் 'முபாரக் மாலை' என்னும் நூலை தொங்கல் 'பைத்' தில் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சரிதையை அரபுத் தமிழில் எழுதினார். 1388 பாக்களால் ஆன இக்கோவை 1881ம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது. 'புஹாரி மாலை', 'முஸ்தபா மாலை', 'தன்பீஹு மாலை', 'விபத்து மாலை' ஆகியன இவரது வேறு சில நூல்களாகும். காலியைச் சேர்ந்த எம்.எஸ்.எம்.ஹரீஸ், ஏ.ஆர்.எம்.ஏ.காதர் போன்றோரும் கவிதைத்துறையில் முயற்சிகள் செய்தனர். ஹாதி புலவர், ஹாமித் புலவர், மஹ்மூத் புலவர் ஆகியோரும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள். முஹியித்தீன் புலவர், 'முஹியித்தீன் முனாஜாத்து', 'அத்தாஸ் முனாஜாத்து' என்பவற்றை இயற்றினார். (மரீனா இல்யாஸ் 1998:45)

தொடர்ந்து வந்த காலத்தில், நாட்டார் பாடலை அடியொற்றியும் இலக்கியங்கள் படைக்கப்பட்டன. இவ்வகையில் திக்குவல்லை அசனா மரைக்கார் உமர்லெப்பை எழுதிய முனாஜாத்து குறிப்பிடத்தக்கது. வெலிகமையைச் சேர்ந்த அஹமது நெய்னா மரைக்கார் ஆலிம் (டப்பி ஆலிம்) அரபுச் சிங்களத்திலும் கவிதைகள் படைத்தார். "அதி விற்பன விவேக சிந்து" இவரது நூலாகும். கோலாட்டம் பாடல்களையும் இவர் இயற்றியுள்ளார். (மரீனா இல்யாஸ் 1998:45)

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் தென்னிலங்கையில் புதியதோர் இலக்கியப் பாரம்பரியம் தோன்ற வித்திட்டவர் செ.ஆ.முஹம்மது காஸிம் என்பவராவார். இவர், 1925ம் ஆண்டிலிருந்து சுமார் 1950கள் வரை ஈழத்து முஸ்லிம்களால் மேற்கொள்ளப்பட்ட நூல்


ISBN 978-624-5736-14-0

வெளியீட்டு முயற்சிகளில் முன்னிலை வகித்தவர்களுள் ஒருவராகக் காணப்படுகின்றார். மாத்தறை காஸிம் புலவர் எனும் பெயரில் அழைக்கப்பட்ட இவர் தமிழிலும் சிங்களத்திலும் ஒருசேரக் கவிதை படைத்தவர். இவர் 'சர்வ சமயக் கீர்த்தனை', 'இருளகற்றும் ஒளி', 'முடியும் சிம்மாசனமும்', 'ஞானக்கண்', 'காலிகேலியா', 'கோட்டை சோழியா', 'புத்திப்பாட்டு', 'தரீக்காச் சண்டை', 'கதிர்காமக் கும்மி' முதலிய நூல்களை வெளியிட்டுள்ளார். மேலும் புர்தா என்ற அரபுக் கவிதையின் சில பகுதிகளைக் 'கவிப்பரிவட்டம்' எனும் பெயரில் வெளியிட்டுள்ளார். இவரது சில நூல்களில் தனித்துவமானதோர் சிறப்பம்சம் காணப்படுகின்றது. இவரது நூல்களின் சிங்களப் பாடல் வரிகளில் வரும் சொற்கள் தமிழ் மொழியிலும் அவ்வாறே எழுதப்பட்டிருக்கும். அதாவது முதலில் சிங்கள மொழியில் வரும் பாடல் வரிகளைத் தொடர்ந்து அதே வரிகள் தமிழ் லிபியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும். (எஸ்.எச்.எம்.ஜமீல் 1994:44,45)

அதனைத் தொடர்ந்து, 1950களின் ஆரம்பங்களில் தமிழில் காணப்பட்ட இலக்கிய வடிவங்களான பிரபந்தம், பதிகம், சதகம், மாலை போன்றவற்றையும் உள்வாங்கியும் கவிதை முயற்சிகள் செய்யப்பட்டன. அவர்களுள் கலீல் அவ்ன் மௌலானா அவர்கள் குறிப்பிட்டுக் கூறக்கூடியவராவார். கலீல் அவ்ன் அல் ஹாஷிமி மௌலானா அவர்கள் சிறுவயதிலிருந்து தமிழ் மொழி மீது கொண்ட ஆர்வமே இக்கவிதை முயற்சிக்குக் காரணமாகின. மேலும், மௌலானா அவர்கள் தினகரனிலும் தன்னுடைய கவிதைகளை வெளிட்டதுடன் தமிழிலக்கியத்திற்கு ஒரு புதிய பிரபந்தமான 'நாயகர் பன்னிரு பாடல்கள்' எனும் கவிதையை தந்துள்ளார். இதனை பன்னிரண்டு தலைப்புக்களில் பாடல்களாக வெளியிட்டுள்ளார். இவை "தமிழ் உலகுக்கு இவரால் அளிக்கப்பட்ட புதுப்பிரபந்த வகையாகும்" என சு.வித்தியானந்தன் அவர்கள் குறிப்பிட்டிருப்பதானது இவருடைய கவிதைப் பங்களிப்புக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

"பதிகம் என்பது பத்துப்பாடல்களைக் கொண்டது என தமிழில் இணைத்த போது பன்னிரண்டு பன்னிரண்டு பாடலாக பாடிய வகைப்பாடு இதுவரை கேள்விப்படாத நெறிப்பாடு" என அவ்வை நடராசன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். (ஹிஷாம் இஜாஸ், 21ஆம் நூற்றாண்டின் ஈழத்துத் தமிழ் புலவர் ஜெமாலிய்யா ஸெய்யது கலீல் அவ்ன் அல் ஹாஷிமி மௌலானா, பக்1,2)

மேலும் கலீல் அவ்ன் அல் ஹாஷிமி மௌலானா அவர்கள் சித்திரக் கவிதைகள் எழுதுவதிலும் அதிக ஈடுபாடு உடையவராகக் காணப்பட்டார். இவர் மகானந்தாலங்கார மாலை எனும் சித்திரக் கவிதையை இயற்றியுள்ளார். அச்சித்திரங்கள் யாவும் இவராலே வரையப்பட்டும் உள்ளன. மழை இல்லாத நேரங்களில் மழை வேண்டியும் கவிதை புனைந்துள்ளமை இவரது சிறப்பம்சமாகும். அதுமட்டுமன்றி இன, மத நல்லுறவைக் கட்டியெழுப்பும் வகையிலான கவிதைகளையும் படைத்துள்ளார். (ஹிஷாம் இஜாஸ், 21ஆம் நூற்றாண்டின் ஈழத்துத் தமிழ் புலவர் ஜெமாலிய்யா ஸெய்யது கலீல் அவ்ன் அல் ஹாஷிமி மௌலானா, ப5)


ISBN 978-624-5736-14-0

**முடிவுரை**

தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் பல மதங்களின் செல்வாக்குக் காணப்படுகின்றது. தமிழில் அம்மதங்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட பல இலக்கியங்கள் தோற்றம்பெற்றுள்ளன. தென்னிலங்கைத் தமிழ் இலக்கியங்கள், பெரும்பாலும் இஸ்லாமியர்களால் படைக்கப்பட்டதால் அவை இஸ்லாமிய சமயக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டமைந்தனவாக உள்ளன. மேலும் தென்னிலங்கையானது தென்னிந்தியாவின் காயல்பட்டணம், கீழக்கரை போன்ற பிரதேசங்களுடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வந்தமையும் பக்திசார் இலக்கியங்களின் தோற்றத்திற்கு காரணமாக அமைந்தது. இவ்வாய்வில் அடையாளங் காணப்பட்ட பெரும்பாலான இலக்கியங்கள் இறைத்தூதர்களதும் இறைநேசர்களதும் புகழ்பாடுவதாக அமைந்துள்ளன. மேலும் கந்தூரி, ஹழறா, ராதிப் முதலான மதக்கிரியைகளிலும் உற்சவங்களிலும் புர்தா முதலான புகழ்மாலைகள் பாடப்பட்டுள்ளன. ஈழத்தைப் பொறுத்தவரையில் நவீன ஆக்க இலக்கியங்களின் தோற்றம் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதிகளிலேயே இடம்பெற்றாலும் தென்னிலங்கையில் 1960கள் வரை, மரபுசார்ந்த இலக்கிய வடிவங்களில் அமைந்த மதச்சார்பான இலக்கிய முயற்சிகளுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வந்துள்ளமையினை இவ்வாய்வினூடாக அறிந்து கொள்ளலாம்.

**உசாத்துணை**


1. கார்த்திக்கேசு சிவத்தம்பி, (2000), ஈழத்துத் தமிழ் இலக்கியத் தடம் 1980-2000 பார்வையும் விமர்சனங்களும், மூன்றாவது மனிதன் பதிப்பகம், கொழும்பு.
2. மரீனா இல்யாஸ், (1998), தென்னிலங்கை முஸ்லிம்களின் தமிழ்ச் சிறுகதைகள்: ஓர் ஆய்வு, தமிழ் மன்றம், கல்ஹின்னை.
3. ஜெமீல்,எஸ்.எச்.எம்., (1994), சுவடி ஆற்றுப்படை, இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம், சாய்ந்தமருது
4. செய்யிது அஹமது, (1968), முஸ்லிம் தமிழ்ப் பாரம்பரியம், அரசு வெளியீடு, கொழும்பு-13
5. ஹாமிது, அ.லெ., (1913), ஷாதுலீ இரத்தின மாலை, ஜம்இய்யதுல் இக்வானிஷ் ஷாதிலிய்யீன் அஸ்ஸாவியதுல் பாஸிய்யா லித்தரீக்கதிஷ்ஷாதிலிய்யா, வேர்விலை.
6. றமீஸ் அப்துல்லா, இரகுபரன், க. (ப.ஆ), (2017), தமிழ் இலக்கியத்தில் முஸ்லிம் அடையாளம் - பேராசிரியர் ம.மு.உவைஸ் நினைவுக் கருத்தரங்க சிறப்பு வெளியீடு, மொழித்துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்